2022 அக்டோபர் 18]

தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்துத் தருவதற்கான கருத்துரு ஏற்கெனவே அரசிடம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாச்சியார்கோவிலைத் தனி வட்டமாக அறிவிக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்றாற்போல நாங்கள் அதன்மீது நடவடிக்கை எடுக்கிறோம். பொதுவாக, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் 37 இடங்களில் தாலுகா அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதேபோன்று, 11 இடங்களில் RDO அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்றாற்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எது, எது முக்கியம் என்று நினைக்கிறோமோ, எது, எது தேவை என்ற வரிசையில், நிச்சயமாக அவையெல்லாம் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

ஷைலோக்களைப் புதுப்பித்தல்

***58805—திரு. A.R.R. ரகுராமன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உள்ள கிரைண்டிங் மில் மற்றும் ஷைலோக்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையில் உள்ள கிரைண்டிங் மில் மற்றும் ஷைலோக்களைப் புதுப்பிக்க அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.*

திரு. A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் ஷைலோக்களைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதை விரைவுபடுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்துவதற்காக ஏறத்தாழ 40 கோடி ரூபாய் செலவில் 80 மெட்ரிக் டன் திறன் கொண்டிருக்கக்கூடிய புதிய அரவை மில்லுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதற்கான தொழில்நுட்ப அறிக்கை தற்போது தயார் செய்யப்பட்டு, இயக்குநர் குழுமத்தினுடைய ஒப்புதலுக்காக அளிக்கப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மகிழத்தக்க வகையில், அந்தப் பகுதியில் மக்கள் பயன்பெறத்தக்க அளவில், விரைவில் அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.*

திரு. A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

(வினா வரிசை எண் 7 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

குடியிருப்புகள்

***51687—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, எண் 29, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு தொகுதி, எண் 29, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் 0.15 ஏக்கர் பரப்பில் மாநகராட்சி பொது வகைப்பாடு கொண்ட நிலத்தில் சுமார் 250 வீடுகளில் மக்கள் குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலத்தில் 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின்கீழ், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியிடம் முதற்கட்டமாக முன்நுழைவு அனுமதி கேட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் அமைந்துள்ள நிலத்திற்கு முன்நுழைவு அனுமதி கிடைத்தவுடன், விதிமுறைகளைப் பின்பற்றி, நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.